தமிழ்நாடு அரசு
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (பொருட்காட்சி)த் துறை
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
**அரசுப் பொருட்காட்சி 2022 கோயம்புத்தூர்**

2022 ஆம் ஆண்டு மே–ஜூன் ஆகிய மாதங்களில், கோயம்புத்தூர் சிறைச்சாலை அணிவகுப்பு மைதானத்தில் 45 நாட்களுக்கு நடைபெறவிருக்கும் அரசுப் பொருட்காட்சிக்கு கீழ்க்கண்ட இனங்களுக்கு தமிழ்நாடு ஆளுநருக்காக அவரது சார்பில் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளியில் அதிகபட்சத் தொகை கோருபவருக்கு வியாபார உரிமைக்கான ஒதுக்கீடு செய்ய பரிசீலிக்கப்படும்.

| வ. எண். | இனம் | பிணை வைப்புத் தொகை ரூ. | விண்ணப்பப் படிவத்திற்கான தொகை ரூ. | அரசு நிர்ணயம் செய்துள்ள வாடகை தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | <u>தனிஉரிமை</u><br>கேளிக்கைப்பகுதி<br>(வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள இடங்கள் மட்டும்) | 35,00,000 | 5,250 | 35,50,000 |
| 2 | <u>விளம்பரம்</u><br>(விளம்பர போர்டுகள் துறை அனுமதிக்கும் இடங்களில் மட்டும் அமைக்க வேண்டும்) | 2,00,000 | 5,250 | 2,00,000 |
| 3 | <u>அப்பளம், பஜ்ஜி</u><br>(2 கடைகள், 2பூத்துகள்)<br>(பூத்து அளவு 16’x12’) | 10,00,000 | 5,250 | 10,00,000 |
| 4 | <u>கரும்புச் சாறு</u><br>(2 கடைகள்,<br>2 பூத்துகள்)<br>(பூத் அளவு 12’x8’) | 2,50,000 | 3,150 | 2,75,000 |
| 5 | பானிபூரி, காலி ப்ளவர் பக்கோடா மற்றும் காளான் பக்கோடா<br>(2 பூத்துகள்) 16’x12’ மட்டும், மற்றும் 500 ச.அடி பலகையில்லாத அரங்கம்<br>(பானிபூரி,பேல்பூரி, சோலாபூரி, பிரெட் ரோஸ்ட், கட்லெட், சுண்டல், பாவுபாஜி, சிப்ஸ் வகையறா மசால்பூரி, காலி ப்ளவர் பக்கோடா மற்றும் காளான் பக்கோடா ஆகிய இனங்கள் மட்டும்)<br>(பூத்து எதிரில் பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் எவ்வித இடையூறுமின்றி டேபிள்கள் மற்றும் நாற்காலிகள் மட்டும் போட அனுமதி) | 7,00,000 | 4,200 | 7,25,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | டீ, காபி, பிஸ்கட் வெற்றிலைப் பாக்கு<br>(2 பூத்துகள் மட்டும்) 10’x12’<br>(புகையிலை, சிகரெட் நீங்கலாக) | 50,000 | 2100 | 55,000 |
| 7 | ஐஸ்கிரீம்<br>(2 கடைகள், 2 பூத்துகள்) (8’x8) | 3,00,000 | 3150 | 3,50,000 |
| 8 | பஞ்சுமிட்டாய் (2 பூத்துகள்) (8’x8’) | 3,00,000 | 3150 | 3,30,000 |
| 9 | குளிர்பானம், பழரசம் மற்றும் ஜிகிர்தண்டா<br>(2 பூத்துகள்) (8’x8’) (பிளாஸ்டிக் பைகள் மற்றும் பாட்டிலில்அடைத்த குடிநீர்) | 2,00,000 | 3150 | 2,25,000 |
| 10 | பாப்கார்ன் (பொறித்தது மற்றும் அவித்தது மட்டும்), பால்கோவா (2 பூத்துகள்) (8’x8’) | 3,00,000 | 3150 | 3,30,000 |
| 11 | உணவகம்<br>சை வம் & அசைவம்<br>(600ச.அடி திறந்தவெளி)<br>(ஏனைய தனிஉரிமை இனங்களில்<br>இருக்கும் இனங்கள் தவிர) | 75,000 | 1575 | 95,000 |
| 12 | 3D Show 1000 சதுர அடி | 1,00,000 | 3150 | 1,00,000 |
| 13 | Animation 1000 சதுர அடி | 1,00,000 | 3150 | 1,00,000 |
| 14 | Cycle Stand | 1,50,000 | 3150 | 1,75,000 |

அரங்குகள்

| வ.எண். | அரங்கு எண் | சதுர அடி | பிணை வைப்புத் தொகை ரூ. | விண்ணப்பப் படிவத்திற்கானத் தொகை ரூ. | அரசு நிர்ணயம் செய்துள்ள வாடகை தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | 500 | 1,20,000 | 1575 | 1,25,000 |
| 2 | 2 | 1000 | 1,25,000 | 1575 | 1,50,000 |
| 3 | 3 | 1000 | 1,25,000 | 1575 | 1,50,000 |
| 4 | 4 | 750 | 1,00,000 | 1575 | 1,30,000 |
| 5 | 5 | 625 | 1,00,000 | 1575 | 1,25,000 |
| 6 | 6 | 500 | 1,00,000 | 1575 | 1,20,000 |
| 7 | 11 | 400 | 1,00,000 | 1575 | 1,20,000 |
| 8 | 12 | 400 | 1,00,000 | 1575 | 1,20,000 |
| 9 | 13 | 400 | 75,000 | 1575 | 1,00,000 |
| 10 | 14 | 400 | 75,000 | 1575 | 90,000 |
| 11 | 15 | 400 | 75,000 | 1575 | 90,000 |
| 12 | 16 | 400 | 75,000 | 1575 | 90,000 |
| 13 | 19 | 400 | 1,00,000 | 1575 | 1,10,000 |
| 14 | 34 | 400 | 1,00,000 | 1575 | 1,25,000 |
| 15 | 38 | 400 | 1,00,000 | 1575 | 1,25,000 |

**கடைகள் – ஏ வரிசை**

| வ.எண். | கடை எண் | சதுர அடி | பிணை வைப்புத் தொகை ரூ. | விண்ணப்பப் படிவத்திற்கானத் தொகை ரூ. | அரசு நிர்ணயம் செய்துள்ள வாடகை தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | ஏ1 | 150 | 75,000 | 525 | 85,000 |
| 2 | ஏ2 | 150 | 75,000 | 525 | 85,000 |
| 3 | ஏ3 | 150 | 75,000 | 525 | 85,000 |
| 4 | ஏ4 | 150 | 75,000 | 525 | 85,000 |
| 5 | ஏ5 | 150 | 75,000 | 525 | 85,000 |
| 6 | ஏ6 | 150 | 75,000 | 525 | 85,000 |
| 7 | ஏ7 | 150 | 50,000 | 525 | 55,000 |
| 8 | ஏ8 | 150 | 50,000 | 525 | 55,000 |
| 9 | ஏ9 | 150 | 50,000 | 525 | 55,000 |
| 10 | ஏ10 | 150 | 50,000 | 525 | 55,000 |
| 11 | ஏ11 | 150 | 50,000 | 525 | 55,000 |
| 12 | ஏ12 | 150 | 50,000 | 525 | 55,000 |

**பி வரிசை**

| வ.எண். | கடை எண் | சதுர அடி | பிணை வைப்புத் தொகை ரூ. | விண்ணப்பப் படிவத்திற்கானத் தொகை ரூ. | அரசு நிர்ணயம் செய்துள்ள வாடகை தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | பி1 | 150 | 30,000 | 525 | 35,000 |
| 2 | பி2 | 150 | 30,000 | 525 | 35,000 |
| 3 | பி3 | 150 | 30,000 | 525 | 35,000 |
| 4 | பி4 | 150 | 30,000 | 525 | 35,000 |
| 5 | பி5 | 150 | 30,000 | 525 | 35,000 |
| 6 | பி6 | 150 | 30,000 | 525 | 35,000 |
| 7 | பி7 | 150 | 30,000 | 525 | 35,000 |
| 8 | பி8 | 150 | 30,000 | 525 | 35,000 |
| 9 | பி9 | 150 | 30,000 | 525 | 35,000 |
| 10 | பி10 | 150 | 30,000 | 525 | 35,000 |
| 11 | பி11 | 150 | 30,000 | 525 | 35,000 |

| மாவட்டம் | ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் வழங்கப்படும் நாட்கள் மற்றும் நேரம் | ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பெறப்படுவதற்கான கடைசி நாள் மற்றும் நேரம் | ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் இடம், நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|
| கோயம்புத்தூர் | **29.04.2022** முதல் **15.05.2022** (காலை **10.00** மணி முதல் மாலை **5.45** மணி வரை மற்றும் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாளான **16.05.2022** அன்று காலை **10.00** மணி முதல் நண்பகல் **12.00** மணி வரை) **(அரசு விடுமுறை நாட்கள் தவிர)** | **16.05.2022** பிற்பகல் **2.00** மணி வரை | இராஜாஜி மண்டபம், சென்னை–**2**, **16.05.2022** பிற்பகல் **3.30** மணி |

**2)** வியாபாரம் செய்ய ஒதுக்கீடு செய்யும் அரங்கு அமைக்கவுள்ள இடம் மற்றும் அளவுகள் விபரம், விண்ணப்பப் படிவம் பெறும் இடம் செய்தி மக்கள் தொடர்புத் துறை பொருட்காட்சிப் பிரிவு, தலைமைச் செயலகம், சென்னை–**9.** (நாமக்கல் கவிஞர் மாளிகை, **10**–வது தளம்)இல் வரைபடத்தை பார்த்து தெரிந்துக் கொள்ளலாம். கோயம்புத்தூர் அரசுப் பொருட்காட்சி **2022**க்கான நிரப்பப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிப் பெட்டி, **29.04.2022** முதல் **16.05.2022** மதியம் **2.00** மணி வரை **(அரசு விடுமுறை நாட்கள் தவிர – அலுவலக நேரத்தில்)** இணை இயக்குநர் (கள விளம்பரம்), செய்தி மக்கள் தொடர்புத் துறை, நாமக்கல் கவிஞர் மாளிகை, **10**–வது தளம், தலைமைச் செயலகம், சென்னை–**9**, அவர்கள் அறையில் வைக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி நிகழ்வு **16.05.2022** அன்று பிற்பகல் **3.30** மணிக்கு இராஜாஜி மண்டபம், சென்னை–**2** என்ற இடத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்தவர்கள் முன்னிலையில் நடைபெறும்.

**3)** விண்ணப்பப் படிவங்களை நேரடியாகவும் பெறலாம் அல்லது இணையதளத்திலும் பதிவிரக்கம் செய்யலாம். தனி உரிமை இனங்கள்/தனியார் அரங்குகள்/கடைகளுக்கு ஒப்பந்தப்புள்ளி அளிப்பவர்கள், அதற்கான படிவத்தில் ஒதுக்கீடு பெறவேண்டிய இனத்தின் எண்ணை குறிப்பிட்டு பிணை வைப்புத் தொகைக்கான வங்கி கேட்பு வரைவோலையையும் (Bank Demand Draft), இணைத்து மூடி முத்திரையிட்ட உறையின் மேல் தனி உரிமை இனங்கள் / தனியார் அரங்குகள்/ கடைகள் எண்ணையும் குறிப்பிட வேண்டும். ஒப்பந்தப்புள்ளி அளிக்க விரும்புவோர் உரிய நேரத்தில், பிணை வைப்புத் தொகை வங்கி கேட்பு வரைவோலையாக (Bank Demand Draft) மட்டுமே செலுத்தி அளிக்கலாம். எக்காரணம் கொண்டும் பிணை வைப்புத் தொகை பணமாக பெறப்படமாட்டாது.

**4)** ஒவ்வொரு ஒப்பந்தப்புள்ளிக்கும் தனித்தனியாக பிணை வைப்புத் தொகையினை வங்கி கேட்பு வரைவோலையாக (Bank Demand Draft) இணைக்கப்படவேண்டும். ஒப்பந்தப்புள்ளிப் படிவத்தில் புகைப்படம் கண்டிப்பாக ஒட்டியிருக்க வேண்டும்.

**5)** தனிஉரிமை இனங்கள்/தனியார் அரங்குகள்/கடைகளுக்கு ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு ஆய்வு செய்த பின்னர் தகுதியான நபருக்கு வியாபார உரிமம் வழங்கும் கடிதம், இயக்குநர் ஒப்புதல் பெற்று அனுப்பி வைக்கப்படும். ஒப்பந்தப்புள்ளியில் வெற்றி பெற்றவர்கள், முழுத் தொகையை (அதாவது பிணை வைப்புத் தொகையை சேர்க்காமல்) உரிமக் கடிதம் கிடைத்த நாளிலிருந்து ஆறு தினங்களுக்குள் முழுவதுமாக செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தாவிட்டால், அவர்கள் செலுத்திய பிணை வைப்புத் தொகை,

கண்டிப்பாக திருப்பி தரப்படாமல் அரசுக் கணக்கில் சேர்க்கப்படும் மற்றும் ஒதுக்கீடு செய்யப்பட்ட இனம் ரத்து செய்யப்படும். தவிர, ஒதுக்கீடு தொகைக்கு ஜி.எஸ்.டி. 18% செலுத்துதல் வேண்டும். மேலும், ஒதுக்கீடு பெறப்பட்ட இனத்தினை ஏதாவதொரு சூழ்நிலையில் ரத்து செய்திட கோரினாலும், அவர் செலுத்திய பிணை வைப்புத் தொகை கண்டிப்பாக திருப்பித் தரப்படாமல், ரத்து செய்ய கோரும் நபரின் பெயர் கருப்புப் பட்டியலில் (Black List) சேர்க்கப்பட்டு, வருங்காலங்களில் ஒப்பந்தப்புள்ளியில் பங்குபெற அனுமதிக்கப்பட மாட்டாது.

6) சிறிய கடைகளுக்கு மட்டும், ஒரு மேஜை 3'x3' அளவில் அனுமதிக்கப்படும். அனுமதிக்கப்படும் 3'x3' அளவிலான மேஜையைத் தவிர வேறு மேஜை எதையும் போட மாட்டேன் என்று உறுதி கூறுபவர்களே ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளலாம். இவற்றை மீறி மேஜை ஏதேனும் போடப்பட்டிருப்பின் அவற்றை பறிமுதல் செய்வதோடு பொருட்காட்சி மைதானத்திலிருந்து கடை உரிமையாளர் வெளியேற்றப்பட்டு சட்டப்பூர்வமான நடவடிக்கையும் அவர் மீது மேற்கொள்ளப்படும். தனியார் அரங்குகளுக்கு கண்டிப்பாக மேஜை அனுமதி கிடையாது. குறுந்தகடுகள் (CD) மற்றும் வீடியோ கேசட் கட்டாயமாக விற்பனை செய்ய அனுமதிக்கப்பட மாட்டாது.

7) பாதுகாப்புக் கருதி கடைகள்/தனியார் அரங்குகளுக்குரிய ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்கள், தங்களது நிலையான முகவரிக்கு சான்றாக புகைப்பட நகல் கொண்ட உணவு பங்கீட்டு அட்டை/ஓட்டுநர் உரிமம்/கடவுச்சீட்டு (Passport)/வங்கிப் புத்தகம்/வாக்காளர் அடையாள அட்டை போன்றவற்றில் ஏதேனும் ஒன்றின் நகல் அளிக்க வேண்டும். மேற்கண்ட ஐந்து இனங்களும் இல்லையெனில், வட்டாட்சியர் அல்லது அவருக்கு இணையான அலுவலரிடமிருந்து பெறப்பட்ட முகவரிச் சான்றினை அளிக்க வேண்டும்.

8) அரங்குகளில்/கடைகளில்/பூத்துக்களில் மின் இணைப்பு ஏதாவது ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டுமே வழங்கப்படும். தங்களது கடைக்கும்/பூத்துக்கும் தேவையான மின்சார இணைப்புகளை உரிமையாளர்கள் அவர்களுடைய சொந்தச் செலவில் அமைத்துக்கொள்ள வேண்டும். மின் இணைப்புகள் ஏற்படுத்துவதற்குத் தரமான மின் உபகரணங்களைப் பயன்படுத்த வேண்டும். அரங்குகளில்/கடைகளில்/பூத்துக்களில் ஒயரிங் செய்யும்பொழுது, பிவிசி (PVC) பைப்பைப் பயன்படுத்தி வயரிங் செய்ய வேண்டும். பொருட்காட்சி உதவிச் செயற் பொறியாளர் (மின்) அவர்களிடம் ஒப்புதல் பெற்ற பின்பே, அரங்கம்/கடை மற்றும் பூத்துக்கு மின்சாரம் வழங்கப்படும். மின்சாரத்திற்கு யூனிட் ஒன்றுக்கு ரூ.20/– (ரூபாய் இருபது மட்டும்) வீதம் வசூலிக்கப்படும். அவசியமானால் மின் கட்டணம் தேவையானபடி, பிறகு உயர்த்தப்படும். மேலும், நிர்ணயிக்கப்பட்ட மின்சார இணைப்புக்கு முன்பணம் செலுத்திய பிறகே மின் இணைப்பு வழங்கப்படும். தங்களுக்கு வழங்கப்பட்ட மின் இணைப்பைத் தவறாகப் பயன்படுத்தக் கூடாது. அவ்வாறு பயன்படுத்தினால், மின் இணைப்பு உடனடியாக துண்டிக்கப்படுவதுடன், அதற்காக செலுத்திய முன்பணத்தையும் இழக்க நேரிடும்.

9) இணைய தளம் மூலம் விண்ணப்பங்களை பெற்றவர்கள் விண்ணப்பத்திற்குரிய கட்டணத்தினை வங்கி கேட்பு வரைவோலையினை இணைக்க வேண்டும். நேரடியாக விண்ணப்பம் பெற்றவர்கள் அதற்கான ரசீது எண்ணை விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும்.

10) கேளிக்கைப் பகுதி நடத்திட உரிமை வேண்டுவோர் கீழ்கண்ட சான்றிதழ்கள் ஒப்பந்தப்புள்ளியுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

i) ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ளும்போது விண்ணப்பத்துடன் பிணை வைப்புத் தொகைக்கு குறையாத அளவில் வருவாய் அலுவலகத்திலிருந்து பெற்ற செல்நிலை சான்றிதழ் (Solvency Certificate) அல்லது வங்கி உத்திரவாதம் (Bank Guarantee) ஒப்பந்தப்புள்ளி கோரும் நபர்/நிறுவனம் பெயரில் மட்டும்தான் அளித்தல் வேண்டும். வேறொரு நபர்/நிறுவனம் பெயரில் இருந்தால் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.

ii) டோரா-டோரா, பிரேக் டான்ஸ், ரோலர் கோஸ்டர், பிரஸ்பீ, ரேஞ்சர் உள்ளிட்ட நவீன கேளிக்கை சாதனங்கள் வைத்திருப்பின் அவற்றிற்கு முன்னுரிமை வழங்கப்படும். தவிர, உறுதிச் சான்றிதழ் (Stability Certificate), மின் பாதுகாப்புச் சான்றிதழ் (Safety Certificate) மற்றும் நுகர்வோர் காப்புறுதி (Insurance) ஆகியவற்றை அளித்த பின்னரே கேளிக்கைச் சாதனங்களை இயக்க அனுமதி அளிக்கப்படும்.

iii) கேளிக்கைப் பகுதிக்கான விண்ணப்பத்தினை இணைய தளம் மூலம் பெற்றவர்கள் அதற்கான விண்ணப்பக் கட்டணம் ரூ.5,250/– (ரூபாய் ஐந்தாயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்) வங்கி கேட்புக் வரைவோலையாக ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும். நேரடியாக விண்ணப்பம் பெற்றவர்கள் ரூ.5,250/– (ரூபாய் ஐந்தாயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்)க்கான ரசீது இணைக்க வேண்டும்.

iv) முந்தைய பொருட்காட்சிகளில் கலந்து கொண்டு அரசிற்கு செலுத்த வேண்டிய தொகைகள் ஏதேனும் செலுத்தாமல் நிலுவை வைத்திருப்பின், அவர்கள் ஒப்பந்தப்புள்ளியில் வெற்றி பெற்றாலும் கண்டிப்பாக எக்காரணத்தைக் கொண்டும் வியாபாரம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

11) தனிஉரிமை இனங்கள்/தனியார் அரங்குகள்/ கடைகள் ஒதுக்கீடு பெறுபவர்கள் தாங்கள் வியாபாரம் செய்யும் இடத்தில் தீயணைப்பு முன்னேற்பாட்டிற்காக தீயணைப்புத் துறையினரால் பிரசுரிக்கப்பட்ட, தேவைக்கேற்ப மணல், தண்ணீர் மற்றும் இதர உடனடி தீ தடுப்பு சாதனங்களை கட்டாயம் வைத்திருத்தல் வேண்டும் மற்றும் உரிய இனங்களுக்கான காப்பீடு செய்தல் வேண்டும்.

12) பிணை வைப்புத் தொகையை, ‘கணக்கு அலுவலர் (பொருட்காட்சி)’ ‘Accounts Officer (Exhibition)’, என்ற பெயரில் வங்கி கேட்பு வரைவோலையாக (Bank Demand Draft) செலுத்த வேண்டும். பிற விபரங்களுக்கு தலைமைச் செயலகத்தில் உள்ள செய்தி மக்கள் தொடர்புத் துறை பொருட்காட்சிப் பிரிவை அணுகவும்.

13) ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்)மும் அதற்கு மேல் பிணைவைப்புத் தொகைக்கு உள்ள இனங்களுக்கான ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ளும்போது விண்ணப்பத்துடன் பிணைவைப்புத் தொகைக்கு குறையாத அளவில் வருவாய்த்துறை அலுவலகத்திலிருந்து பெற்ற செல்நிலை சான்றிதழ் (Solvency Certificate) அல்லது வங்கி உத்திரவாதம் (Bank Gurantee) ஒப்பந்தப்புள்ளி கோரும் நபர்/நிறுவனம் பெயரில் மட்டும்தான் அளித்தல் வேண்டும். வேறொரு நபர்/நிறுவனம் பெயரில் இருந்தால் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.

14) மின் நுகர்வுக்கு தனியார் அரங்குகள்/கடைகளுக்கு ரூ.5000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) முன்பணமாகவும், தனிஉரிமை இனங்களுக்கு ரூ.10,000/-(ரூபாய் பத்தாயிரம் மட்டும்) முன்பணமாகவும் ஒப்பந்தப்புள்ளியில் வெற்றி பெற்றவர்கள் செலுத்தவேண்டும். பொருட்காட்சிக்கென, மின் வாரியத்திடமிருந்து பெறப்பட்ட ஒரு தற்காலிக மின்னிணைப்பின், ஒப்பளிக்கப்பட்ட மின் பளு அதிகமாகாத வகையில், பொருட்காட்சியில் தனியார் அரங்குகள் மற்றும் கடைகள் நடத்துபவர்கள், தினசரி இரவு பத்து மணிக்குப் பின், தமது அரங்குகள்/கடைகளில் ஒரே ஒரு மின் விளக்கை மட்டுமே பயன்படுத்த வேண்டும். தவறும் பட்சத்தில், மின் வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய, கூடுதல் மின் துய்ப்புக் கட்டணத்தை, தனியார் அரங்கு/கடைக்காரர்களிடம் வசூலிக்கப்படும். மேற்கண்ட ஒரு மின் விளக்குக்கான கட்டணமாக, ரூ.250/– (ரூபாய் இருநூற்று ஐம்பது மட்டும்), மின் நுகர்வுக் கட்டணத்துடன் சேர்த்து வசூலிக்கப்படும்.

15) ஒதுக்கீடு பெறாதவர்கள், செலுத்தப்படும் பிணை வைப்புத் தொகை கண்டிப்பாக 15 நாட்களுக்கு பிறகுதான் திரும்ப வழங்கப்படும்.

16) அரசு நிர்ணயித்துள்ள தொகைக்கு அதிகமாகத் தான் ஒப்பந்தப்புள்ளி அளித்தல் வேண்டும்.

17) மேற்கூறிய ஒப்பந்தப்புள்ளிக்கான படிவங்கள் மற்றும் விபரங்களை பின்வரும் இணையதளத்தில் www.tenders.tn.gov.in விண்ணப்பப் படிவங்கள் தருவித்து குறிப்பிட்ட இனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி அளிக்கும்போது அவ்வினத்திற்கான விண்ணப்பப் படிவத்தின் கட்டணத்தையும் சேர்த்து வங்கி கேட்பு வரைவோலையாக இணைத்து அனுப்ப வேண்டும். அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையும் இணை இயக்குநர் (கள விளம்பரம்), செய்தி–மக்கள் தொடர்புத் துறை, நாமக்கல் கவிஞர் மாளிகை 10–வது தளம், தலைமைச் செயலகம், சென்னை–9ல் உள்ள அவர்கள் அறையில் வைக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் சேர்க்க வேண்டும்.

18) அரசு எதிர்பார்க்கும் வருவாயின் அளவைப் பொறுத்து ஒப்பந்தப்புள்ளியை உறுதிசெய்ய/நிராகரிக்க துறை இயக்குநருக்கு முழு அதிகாரம் உண்டு.

அனுப்புநர் :

மனுதாரர் புகைப்படம்
(கடவுச்சீட்டு அளவு)

பெறுநர் :

இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத் துறை,

தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

அய்யா,

.................................................................................................த/பெ........................................................ என்கின்ற நான், 21 வயது நிரம்பப் பெற்றவன்..........................................ஆம் ஆண்டு.............................................................................................................. நடைபெறும் அரசுப் பொருட்காட்சியில்....................................................................................................விற்பனை செய்வதற்கு.........................................................................எண் கொண்ட கடை/தனியார் அரங்கு/தனி உரிமை இனம் ஒதுக்கீடு வேண்டி அதற்கு பிணை வைப்புத்தொகையாக (வங்கி வரைவோலை எண்.............................. நாள்................................ வங்கி பெயர்......................................................................................................................ரூ................................. (ரூபாய்........................................................................................................................)இத்துடன் இணைத்துள்ளேன். மற்றும் விளம்பரத்தில் கோரியபடி தேவையான செல்நிலை சான்றிதழ் (Solvency Certificate) / வங்கி உத்தரவாதம் (Bank Guarantee) இத்துடன் இணைத்துள்ளேன்.

2. இணைப்பிலுள்ள ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் மற்றும் வியாபார உரிமங்களின் நிபந்தனைகள் ஆகியவற்றினை தெளிவாகப் படித்துத் தெரிந்துகொண்டேன். அவை அனைத்திற்கும் கட்டுப்பட்டு ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்கிறேன். ஒப்பந்தப்புள்ளி அதிகபட்சத் தொகையாக ரூ.................................................................. (ரூபாய் ..............................................................................................................................மட்டும்) என வாடகையாக செலுத்த சம்மதிக்கிறேன்.

3. இதுவரை தமிழக அரசோ அல்லது அரசு நிறுவனங்களோ நடத்திய பொருட்காட்சிகளில் பணம் செலுத்தத் தவறியதாகவோ அல்லது விதிமுறைகளுக்கு மாறாக நடந்ததாகவோ என் மீது/என் நிறுவனத்தின் மீது எந்தவித குற்றச்சாட்டும் இல்லை என உறுதி கூறுகிறேன். அவ்வாறு இருப்பதாகத் தெரியவந்தால், என் உரிமத்தை ரத்து செய்ய ஒப்புதல் அளிப்பதுடன், இப்பொருட்காட்சியில் ஒதுக்கீடு பெறுவதற்காக நான் செலுத்திய பிணை வைப்புத்தொகையினை இழக்கவும் சம்மதிக்கிறேன்.

4. ஒதுக்கீடு பெறும் வியாபார அமைப்பின் முன்புறம் மேசை (Table) போன்ற எவ்வித மர/இரும்பு தளவாடங்களும் போடமாட்டேன் என்றும் உறுதி தருகிறேன். மீறி போட்டிருப்பின், அவற்றை முழுவதுமாக பொருட்காட்சி நிருவாகத்தினர் பறிமுதல் செய்துகொள்ள சம்மதிக்கிறேன்.

5. எனது முகவரிக்குச் சான்றாக புகைப்பட நகல் கொண்ட உணவு பங்கீடு அட்டை/ஓட்டுநர் உரிமம்/பாஸ்போர்ட்/வங்கிப்புத்தகம்/வாக்காளர் அட்டை (போன்ற

ஏதேனும் ஒன்றின்) நகல் இணைத்துள்ளேன். அது இல்லாததால் வட்டாட்சியர் அல்லது அவருக்கு இணையான அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட முகவரிச் சான்று, விண்ணப்பத்தோடு இணைத்துள்ளேன். தேவைப்படும் மூலப் பிரதிகள் (Original) அதிகாரிகளின் பார்வைக்கு ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்வதற்கு முன்பாக அளிக்கிறேன் என உறுதி அளிக்கிறேன்.

6. ஒதுக்கீடு பெறாத தனி உரிமை இனத்திற்கு செலுத்திய காப்புத்தொகை 15 நாட்கள் கழித்து வாங்கிக்கொள்ள சம்மதிக்கிறேன்.

7.மனுதாரரின் புகைப்படம் கண்டிப்பாக ஒட்டப்பட வேண்டும். இல்லையொனில் ஏதேனும் போட்டி ஏற்படும்பட்சத்தில் அரசு எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.

தங்கள் உண்மையுள்ள,

இடம் :
நாள் :

நிரந்தர முகவரி :

தொலைபேசி எண் :

---

குறிப்பு : அடையாள அட்டை வழங்கிட ஏதுவாக எனது புகைப்படம் ஒன்று தனியாக விண்ணப்பத்துடன் இணைத்துள்ளேன்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (பொருட்காட்சி)த்துறை

ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்

1. 21 வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டும் ஏலத்தில்/ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளலாம்.

2. தமிழக அரசோ அல்லது அதன் நிறுவனங்களோ ஏற்கனவே நடத்திய பொருட்காட்சிகளில் கலந்து கொண்டு வாடகை/மின் கட்டணம்/இதர இனங்கள் முழுமையாக செலுத்தாத வகையில் நிலுவைத்தொகை வைத்திருப்பவர்கள் இப்பொருட்காட்சிக்கான ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். பொருட்காட்சியில் பங்கேற்ற பிறகு, மேற்கண்ட விவரங்கள் ஆதாரப்பூர்வமாக தெரியவரின், அவர்கள் இப்பொருட்காட்சியில் பங்கேற்பதற்காக செலுத்திய பிணை வைப்புத்தொகை ஏற்கனவே நிலுவையிலுள்ள தொகைக் கணக்கில் நேர் செய்யப்படும். மேலும், இப்பொருட்காட்சியில் கலந்துகொள்வதற்கான ஒதுக்கீடு இரத்து செய்யப்படும்.

3. இணையதளம் மூலம் விண்ணப்பங்களை பெற்றவர்கள் விண்ணப்பத்திற்கான கட்டணத்தினை வங்கி வரைவோலை மூலம் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும் நேரடியாக விண்ணப்பம் பெற்றவர்கள் அதற்கான ரசீது எண்ணை விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும். ஒவ்வொரு ஒப்பந்தப்புள்ளிக்கும் தனித்தனியாக வங்கி கேட்பு வரைவோலை இணைக்கப்பட வேண்டும். விண்ணப்பக் கட்டணம்/பிணை வைப்புத் தொகை ஆகிய இரண்டும் இணைக்கப்படாமலிருந்தால் அவ்விண்ணப்பங்களை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. குறிப்பிட்ட இனத்திற்கு பிணை வைப்புத் தொகை செலுத்தியவர்கள் அதற்கு மட்டும்தான் ஒப்பந்தப்புள்ளி அளிக்க முடியும்.

4. ஒப்பந்தப்புள்ளி அளிப்பவர்கள் அதற்கான ஒப்பந்தப்புள்ளிப் படிவத்தில் அதன் பெயரை குறிப்பிட்டு பிணைவைப்புத் தொகைக்கான வங்கி கேட்பு வரைவோலையும் இணைத்து மூடி முத்திரையிட்ட உறையின் இனத்தின் பெயரை எழுத வேண்டும். அவற்றை குறிப்பிட்ட தேதியில் மதியம் 2.00 மணி வரை இணை இயக்குநர் (கள விளம்பரம்), செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9 அவர்கள் அறையில் வைக்கப்பட்ட பெட்டியில் சமர்ப்பிக்க வேண்டும்.

5. ஒப்பந்தப்புள்ளி முடிந்த பிறகு, அதில் வெற்றி பெறாதவர்களின் பிணை வைப்புத் தொகை 10 நாட்கள் கழித்து திருப்பித் தரப்படும். மேலும், ஏலம் முடிந்தபிறகு பொருட்காட்சி தவிர்க்க முடியாத காரணங்களால் தள்ளி வைக்கப்பட்டாலோ, இரத்து செய்யப்பட்டாலோ, நடைபெறாமல் போனாலோ, இடம் மாற்றப்பட்டாலோ ஏற்படும் எந்த விளைவுகளுக்கும் பொருட்காட்சி நிருவாகம் பொறுப்பாகாது.

6. ஒப்பந்தப்புள்ளியில் வெற்றி பெற்றவர், வியாபாரத்தை செய்யத் தகுதி அற்றவர் என்று தெரிந்தால் அவருடைய ஒதுக்கீட்டை இரத்து செய்து மறு ஒப்பந்தப்புள்ளி நடத்தவோ அல்லது அது தொடர்பாக மாற்று நடவடிக்கை மேற்கொள்ளவோ செய்தி மக்கள் தொடர்புத்துறை, இயக்குநர் அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு.

7. பொருட்காட்சி தொடர்பாக ஏற்படும் எந்தப் பிரச்சனையின் மீதும், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநரே இறுதி முடிவெடுக்க உரிமை பெற்றவர் ஆவார். அப்படி எடுக்கப்படும் முடிவு, வியாபார உரிமம் விழைவோர் அனைவரையும் கட்டுப்படுத்தக் கூடியதாகும்.

8. ஒப்பந்தப்புள்ளியில் வெற்றி பெற்றவர்கள் அதற்கான முழு தொகை மற்றும் GST 18% உட்பட சேர்த்து செலுத்தவேண்டும். (அதாவது பிணை வைப்புத்தொகையை கணக்கில் சேர்க்காமல்) உரிமைக் கடிதம் பெற்ற நாளிலிருந்து ஆறு தினங்களுக்குள் தொகையினை செலுத்த வேண்டும். அப்படி செலுத்தத் தவறினால், ஒப்பந்தப்புள்ளியில் வெற்றி பெற்றவரின் தனி உரிமம் இரத்து செய்யப்பட்டு, அது சம்பந்தமாக வேறு முடிவுகள் எடுக்கும் அதிகாரம் செய்தி மக்கள் தொடர்புத்துறை – இயக்குநருக்கு உண்டு. மேலும், பிணை வைப்புத் தொகை ஒரே நபரால் வேறு இனங்களில் செலுத்தப்பட்டு இருந்தால், அப்பணத்தை, பறிமுதல் செய்வதற்கும் இயக்குநர்/இணை இயக்குநருக்கு உரிமை உண்டு.

9. ஒப்பந்தப்புள்ளி நடைபெறுமிடத்தில் பங்குகொள்வோர், ஏதேனும் இடையூறு விளைவிப்பின் அவர்கள் பிணை வைப்புத் தொகை செலுத்தியிருப்பினும், ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளாமல் அவர்களை விலக்கவும், பிணை வைப்புத் தொகையாக செலுத்திய தொகையை பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுக்கவும் பொருட்காட்சி நிருவாகத்திற்கு அதிகாரம் உண்டு.

10. பொருட்காட்சியை நீட்டிப்பு செய்யக்கூடிய அதிகாரம், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் அவர்களுக்கு உண்டு. அவ்வாறு நீட்டிப்பு செய்யப்படும் காலங்களுக்கு, அனைத்து வியாபாரிகளுக்கும் பொருட்காட்சி நிருவாகம் நிர்ணயம் செய்யும் வாடகையை கட்டாயம் செலுத்த வேண்டும். சிறப்புக் காரணங்களுக்காக பொருட்காட்சி காலம் நீட்டிப்பு செய்யப்பட்டாலோ அல்லது குறைக்கப்பட்டாலோ வாடகையை கூடுதலாகவும், குறைத்தும் வசூலிக்கும் அதிகாரம் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநருக்கு உண்டு.

11. ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் தமது வசிப்பிடத்திற்கான அத்தாட்சி நகல்களையும் (அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்களின் சான்றுடன் உணவுப் பங்கீடு அட்டை/ஓட்டுநர் உரிமம்/பாஸ்போர்ட் போன்றவை) விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

12. ரூ.1,00,000– (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்)க்கு மேல் பிணை வைப்புத் தொகை உள்ள தனி உரிமை இனங்கள்/ அரங்குகள்/கடைகள்/க்கான ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ளும் போது பிணை வைப்புத் தொகைக்கு குறையாமல் விண்ணப்பத்துடன் வருவாய்துறை அலுவலரிடமிருந்து பெற்ற செல்நிலை சான்றிதழ் (Solvency Certificate) (அ) வங்கி உத்தரவாதம் ஒவ்வொரு இனத்திற்கும் அளிக்க வேண்டும்.

13. ஒப்பந்தப்புள்ளி மூலமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட தனிஉரிமை இனம் உரிமையாளர்களால் (அரசுக்கு) பொருட்காட்சிக்கு ஏதேனும் இழப்பு நேரிடின், அவர்கள் செலுத்திய பிணை வைப்புத் தொகை திருப்பித்தரப்பட மாட்டாது. மேலும், கடை உரிமையாளர்கள் செலுத்திய பிணை வைப்புத் தொகையின் நிலுவைத் தொகை இருப்பின், அத்தொகை அரசு பொருட்காட்சி நிறைவுபெறும் போதுதான் ஈடு செய்யப்படும்.

14. ஒப்பந்தப்புள்ளியில் அல்லது நேரடியாக விண்ணப்பம் செய்து ஒதுக்கீடு பெற்ற இனத்திற்கு அனுமதிக்கப்பட்ட உரிமையாளர் அரசுக்குச் செலுத்த வேண்டிய வாடகை பாக்கி அல்லது நிலுவைத்தொகை ஏதேனும் இருப்பின், பொருட்காட்சி நிறைவு பெறுவதற்குப் பதினைந்து நாட்களுக்கு முன்னர் செலுத்தாவிட்டால், அவர்களது பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு, ஏலம் விடப்பட்டு, அத்தொகை அரசு கணக்கில் சேர்க்கப்படும். அவ்வாறு பறிமுதல் செய்யப்படுவதோடு, ஏலத்தொகை போக மீதம் செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஏதேனும் இருப்பின், சட்டபூர்வமான

நடவடிக்கைகளும் தனிஉரிமை இனம் உரிமைதாரர் மீது தொடரப்படும். தவிர குறிப்பிட்ட ஒதுக்கீடு இனங்களுக்கு விண்ணப்ப படிவங்கள் கட்டணம் கட்டாயம் செலுத்தவேண்டும்.

15. பொருட்காட்சி நடைபெறும் நேரத்தில், எந்தவித வாகனமும் பொருட்காட்சித் திடலுக்குள் அனுமதிக்கப்படமாட்டாது. சரக்குகள் ஏற்றிவரும் வண்டிகள் பொருட்காட்சி ஆரம்பிப்பதற்கு ஒரு மணி நேரம் முன்னதாகவோ அல்லது பொருட்காட்சி முடிந்த ஒரு மணி நேரத்திற்குப் பின்பாகவோதான் உள்ளே வர அனுமதிக்கப்படும்.

16. மின்நுகர்வுக்கு தனி உரிமை இனத்திற்கு ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) முன்பணமாக ஒப்பந்தப்புள்ளி வெற்றி பெற்றவரின் காப்புத் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும்.

17. ஒப்பந்தப்புள்ளி படிவம் மற்றும் விவரங்கள் இணையத்தளம் (www.tenders.tn.gov.in) என்ற முகவரியில் படித்து தெரிந்து கொள்ளலாம். அவ்வாறு இணையதளத்தில் ஒப்பந்தப்புள்ளி படிவம் பதிவிரக்கம் செய்தால் விண்ணப்ப படிவத்திற்கான தொகையும் மற்றும் பிணை வைப்புத் தொகையையும் வங்கி கேட்பு வரைசோலையை சமர்பிக்க வேண்டும்.

18. வழக்கு தொடர்பான அதிகார எல்லை (Jurisdiction) சென்னை மாநகர நீதி மன்றங்களுக்கு மட்டுமே உண்டு.

19. மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்கிறேன்.

பெயர் : ஒப்பம்

முகவரி : நாள் :

## தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (பொருட்காட்சி)த்துறை

## வியாபார உரிமங்களுக்குரிய நிபந்தனைகள் :

1. குறிப்பிட்ட இனத்தை ஒப்பந்தப்புள்ளியில் எடுத்தவர் / வியாபார உரிமம் பெற்றவர், உரிமம் பெற்றவற்றிற்கு மட்டுமே வியாபாரம் நடத்த வேண்டும். அவரது உரிமையை வேறு எவருக்கும் மாற்றவோ அல்லது விற்பனை செய்யவோ அனுமதியில்லை.

2. தனி விற்பனை உரிமை பெற்ற வியாபாரிகள் உரிமங்களுக்கு உட்படாத பொருள்களை விற்பனை செய்ய விருப்பப்பட்டால் அதற்கான தனிப்பட்ட சிறப்பு அனுமதியை பொருட்காட்சி இணை இயக்குநர் (கள விளம்பரம்) அவர்களிடம் பெற்று, நிர்ணயிக்கப்பட்ட தொகையை செலுத்திய பின்னரே அவற்றை விற்க வேண்டும்.

3. வியாபார உரிமையாளர்கள், பூத்துகளில் வியாபாரம் செய்ய உரிமை பெற்றபின், பூத்துக்களை தங்களின் சொந்த செலவிலேயே அமைத்துக்கொள்ள வேண்டும். பூத்துக்களின் அளவு குறிப்பிட்ட அளவிற்கு மேற்படக்கூடாது. ஒவ்வொரு பூத்துக்கும் தனி மின் மீட்டர் அமைக்கப்பட வேண்டும். மேலும், பொருட்காட்சிக்குள் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்ட கடை உரிமையாளர்கள் பொருட்காட்சி நிருவாகத்தினருக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

4. அரசு துறைகளோ அல்லது அரசு சார்பு நிறுவனங்களோ தங்களது பொருட்களை பொருட்காட்சியில் தங்களுக்கான அரங்கில் விற்பனை செய்வதையோ, விளம்பரப்படுத்துவதையோ தனி உரிமையாளர்கள் தடைசெய்யக் கோர முடியாது.

5. விற்பனை உரிமை பெற்ற வியாபாரிகள், தாங்கள் எந்த பெயரில் வியாபாரம் செய்ய உரிமம் பெற்றார்களோ அந்தப் பெயரை முதலில் தமிழில் மட்டுமே பெயர்ப் பலகையை எழுதி தங்களின் கடைகளின் முகப்பிலும் பூத்துக்களிலும் வைக்க வேண்டும். மற்றபடி தனித்து மற்றும் பெரிய விளம்பரப் பலகைகள் அல்லது துணி பேனர்கள் போன்றவற்றை விளம்பர நோக்கத்தில் வைத்தல் கூடாது.

6. விற்பனைக்குரிய பொருட்கள், அனுமதிக்கப்பட்ட அரங்குகள், கடைகள் மற்றும் பூத்துக்களில் மட்டுமே விற்கப்பட வேண்டும். கடைகளுக்கு முன்பாகவோ, மேசைகளில் வைத்தோ வியாபாரம் செய்யக்கூடாது. அவ்வாறு வியாபாரம் செய்வதை பொருட்காட்சி நிருவாகத்தால் கண்டுபிடிக்கப்பட்டால் அவை பறிமுதல் செய்யப்படுவதோடு, ஒவ்வொரு முறையும் ரூ.1,500/– (ரூபாய் ஆயிரத்து ஐநூறு மட்டும்) அபராதத் தொகையாக, உடனடியாக அந்த இடத்திலேயே வசூலிக்கப்படும். மீண்டும் மீண்டும் கடைக்கு முன்பாக மேசையில் வியாபாரம் செய்வது கண்டுபிடிக்கப்பட்டால், தொடர்புடைய வியாபார உரிமம் இரத்து செய்யப்படுவதுடன் அவர்கள் செலுத்திய பிணை வைப்புத் தொகையும் பறிமுதல் செய்யப்படும்.

7. பூத்துக்களில் மின் இணைப்பு ஏதாவது ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டுமே வழங்கப்படும். தங்களது பூத்துக்கும் தேவையான மின்சார இணைப்புகளை உரிமையாளர்கள் அவர்களுடைய சொந்தச் செலவில் அமைத்துக் கொள்ள வேண்டும். மின் இணைப்புகள் ஏற்படுத்துவதற்குத் தரமான மின் உபகரணங்களைப் பயன்படுத்த வேண்டும். பூத்துக்களில் வயரிங் செய்யும்பொழுது, பிவிசி (PVC) பைப்பைப் பயன்படுத்தி வயரிங் செய்ய வேண்டும். பொருட்காட்சி மின் பொறியாளர்களின் ஒப்புதல் பெற்ற பின்பே, பூத்துக்கு மின்சாரம் வழங்கப்படும். பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கு கட்டணம் வசூலிக்கப்படும். அவசியமானால் மின்கட்டணம் தேவையானபடி, பிறகு உயர்த்தப்படும். மேலும், நிர்ணயிக்கப்பட்ட

மின்சார முன்பணம் செலுத்திய பிறகே மின் இணைப்பு வழங்கப்படும். தங்களுக்கு வழங்கப்பட்ட மின் இணைப்பைத் தவறாகப் பயன்படுத்தக்கூடாது. அவ்வாறு பயன்படுத்தினால், மின் இணைப்பு உடனடியாக துண்டிக்கப்படுவதுடன், அதற்காக செலுத்திய முன்பணத்தையும் இழக்க நேரிடும்.

8. பூத்துகள் அமைக்கப்பட வேண்டிய இடங்களை பொருட்காட்சி நிருவாகமே முடிவு செய்யும். தங்களின் பூத்துக்களிலும் பணியாற்றுகிறவர்களின் பெயர்களையும் மற்றும் மாதிரி கையொப்பத்தையும் உரிமையாளர்கள் பொருட்காட்சி நிருவாகத்திற்கு வழங்க வேண்டும். அரசுப் பொருட்காட்சியில், விலக்கப்பட்டவர்கள் மற்றும் பணம் கட்டத் தவறியவர்கள் எவரையும் பணிகளில் அமர்த்தக்கூடாது.

9. பூத்துக்கள் பொருட்காட்சி தொடங்கும்போது தயார் நிலையில் இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால், எந்தவித முன்னறிவிப்புமின்றி கடைக்குரிய உரிமம் இரத்து செய்யப்படுவதோடு, பொருட்காட்சி நிருவாகத்திற்கு ஏற்படும் இழப்பீட்டை ஈடுசெய்யும் பொருட்டு, அதனை ஏலதாரர் செலுத்திய பிணை வைப்புத் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும்.

10. வியாபாரத்திற்கு உரிய பொருட்கள் அரசால் அனுமதிக்கப்பட்டதாகவும், பொதுமக்களுக்கு தீங்கிழைக்காததாகவும், தூய்மையானதாகவும், நியாயமான விலைகளைக் கொண்டதாகவும் இருக்க வேண்டும். அரசால் தடை செய்யப்பட்ட பொருட்கள் விற்பனை செய்யப்படக்கூடாது.

11. நகராட்சிக்கோ/மாநகராட்சிக்கோ அல்லது மற்ற அரசு நிறுவனங்களுக்கோ செலுத்த வேண்டிய வரிகளை உரிமையாளர்களே செலுத்த வேண்டும். இதற்கு, பொருட்காட்சி நிருவாகம் பொறுப்பாகாது.

12. பொருட்காட்சியில் பங்கேற்கும்போது, அரசு சட்டத்தின்படியோ அல்லது நகராட்சி/மாநகராட்சி சட்டப்படியோ எடுக்கப்பட வேண்டிய உரிமங்களை, கடை உரிமையாளர்களே எடுத்துக் கொள்ள வேண்டும். இதற்கு பொருட்காட்சி நிருவாகத்தினர் எந்த வகையிலும் பொறுப்பு ஏற்க மாட்டார்கள்.

13. பொதுமக்கள் நன்மை மற்றும் நலன் கருதி பொருட்காட்சி நிருவாகத்தால் தரப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறுவது போன்ற செயல்கள் கண்டுபிடிக்கப்பட்டாலோ அல்லது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டாலோ, நடைபெறுகிற வியாபாரத்தை உடன் தடை செய்யவோ அல்லது நிறுத்தவோ பொருட்காட்சி நிருவாகத்திற்கு முழு அதிகாரம் உண்டு.

14. நிருவாக காரணத்திற்காகவோ, சமூக காரணத்திற்காகவோ அல்லது இயற்கைக் கோளாறு காரணத்திற்காகவோ அவசியம் காரணமாக பொருட்காட்சி நடைபெறும் காலம் குறைக்கப்பட்டால், அதற்காக வாடகை குறைப்பு அனுமதிக்கப்பட மாட்டாது. ஆனால், பொருட்காட்சி நீட்டிக்கப்பட்டால், நீட்டிக்கப்பட்ட காலத்திற்குரிய வாடகை வசூலிக்க இயக்குநருக்கு முழு உரிமை உண்டு.

15. வியாபாரம் செய்வதை காரணமாகக் கொண்டு, தேவைக்கு அதிக அளவில் வேலைக்குரிய நபர்களை பூத்துகளில் பொருட்காட்சி நடக்கும்போதோ அல்லது இரவிலோ தங்கவைத்தல் கூடாது. பகலில் ஒரு பூத்துக்கு ஒருவர் மட்டுமே அனுமதிக்கப்படுவர். மேலும், பூத்துகளில் எந்தவித தடுப்பும் செய்து மற்ற வியாபாரிகளுக்கு விற்பது கூடாது. அப்படி செய்பவர்களின் தனி உரிமை உமத்தின் உரிமம் இரத்து செய்யப்பட்டு, அவர்கள் செலுத்திய பணம் அரசு கணக்கில் சேர்க்கப்படும். மற்றும் வருங்காலத்தில் அவர்கள் பொருட்காட்சி கடை/அரங்கு/தனி உரிமை கடைகள் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி போன்றவற்றில் பங்கேற்கும் தகுதியை

இழந்தவர்களாவார்கள். மேலும் கடை/அரங்கு மற்றும் தனிஉரிமை இனங்கள் எடுத்தவர்கள் பொருட்காட்சி வளாகத்தில் அடுப்பு, மின்சார அடுப்பு, கேஸ் அடுப்பு போன்றவற்றை வைத்து சமைக்கவோ, தீவிபத்து ஏற்படும் எந்தவிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ கண்டிப்பாகக் கூடாது. மேலும், தீயணைப்பு சம்பந்தப்பட்ட பாதுகாப்புப் பணிகளை கடைக்காரர்களே மேற்கொள்ள வேண்டும். இது தொடர்பாக பொருட்காட்சி நிருவாகம் அறிவுறுத்தும் நடவடிக்கைகளை கண்டிப்பாக மேற்கொள்ள வேண்டும்.

17. பூத்துகளில் தின்பண்டங்களை விற்பது கண்டிப்பாக அனுமதிக்கப்பட மாட்டாது. மசாலா பொருட்கள் வறுப்பது மற்றும் மாதிரி பொருட்கள் விற்பது கூடாது.

19. மின் விளக்குக்கான கட்டணம், மின் நுகர்வுக் கட்டணத்துடன் சேர்த்து வசூலிக்கப்படும்.

20. வியாபார தனி உரிமை பெற்றவரே, தங்களது வியாபாரம் தொடர்பாக உள்ள உடைமைகளுக்கு திருட்டு, தீவிபத்து, வெள்ளம், மழை, கலகம், கொள்ளை, நிலநடுக்கம் மற்றும் இயற்கையான பிற இன்னல்களால் ஏற்படும் எவ்வித இழப்புக்கும் பொறுப்பாவார். எனவே, மேற்படி இழப்புகளிலிருந்து தங்களது உடமைகளை காத்துக் கொள்ள அதற்குரிய காப்புறுதி (Insurance) முன்கூட்டியே அவசியம் செய்து கொள்ளுமாறு உரிமம் பெற்றவர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர். எவ்விதமான இழப்புக்கும் அரசு பொறுப்பேற்காது.

21. தனிஉரிமைதாரர் பொருட்காட்சி நிருவாகத்தினரால் வழங்கப்பட்டுள்ள அனுமதி அட்டையில் (Duty Pass) அவர்களது புகைப்படத்தினை அடையாளத்திற்காக ஒட்ட வேண்டும்.

22. தனி விற்பனை உரிமை பெற்ற வியாபாரிகளின் உரிமங்களில் உட்படாத பொருளை விற்பனை செய்ய விருப்பப்பட்டால், அதற்கான தனிப்பட்ட சிறப்பு அனுமதியை, பொருட்காட்சி நிருவாகத்திடம் பெற்று நிர்ணயிக்கப்பட்ட தொகையை செலுத்திய பின்னரே அவற்றை விற்க வேண்டும்.

23. கரும்புச்சாறு/டீ—காபி மற்றும் இதர இனங்கள் விற்பனைக்கான தனி உரிமம் பெற்றவர் அவருடைய பூத்துக்களுக்கு அருகில் தன்னுடைய சொந்தச் செலவில் குப்பைத் தொட்டிகளை அமைத்து அந்தக் குப்பைத் தொட்டிகளில் கரும்புச் சக்கைகள் மற்றும் கழிவுப் பொருட்களை இடல்வேண்டும்.

24. குறுந்தகடுகள் மற்றும் வீடியோ கேசட் மற்றும் அதன் தொடர்புடைய சாதனங்கள் விற்பனை செய்தல் கூடாது.

25. வழக்கு தொடர்பான அதிகார எல்லை (Jurisdiction) சென்னை மாநகர நீதி மன்றங்களுக்கு மட்டும் உண்டு.

26. மேலே குறிப்பிட்டுள்ள பொதுவான ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் மற்றும் வியாபார உரிமத்திற்கான நிபந்தனைகள் ஆகியவற்றை தெளிவாகப் படித்துத் தெரிந்து கொண்டேன். அவை அனைத்திற்கும் கட்டுபட இதன் மூலம் ஒப்புக் கொள்கிறேன்.

27. கரும்புச்சாறுக்கு பிணை வைப்புத்தொகை பொருட்காட்சி முடிந்தவுடன் மீதம் செலுத்த வேண்டிய மின்நுகர்வுத் தொகைக்கு ஈடுசெய்து மீதம் திருப்பி அளிக்கப்படும். தனிஉரிமை கடைகள் பொறுத்தமட்டில் மின்நுகர்வு முன்பணத் தொகை சென்ற ஆண்டுகளில் அந்தந்த இனங்களுக்கு மின்நுகர்வுக்கு செலுத்திய தொகையை கணக்கில் கொண்டு பிணைவைப்புத் தொகையாக வைத்துக் கொள்ளப்படும்.

28. ஒப்பந்தப்புள்ளி அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச தொகைக்கு மேற்பட்டுதான் ஒப்பந்தப்புள்ளி கோர வேண்டும்.

29. அரசுக்கு வரும் வருவாயை பொறுத்து ஒப்பந்த புள்ளியினை உறுதி செய்யவோ/நிராகரிக்கவோ துறை இயக்குநருக்கு முழு அதிகாரம் உண்டு.

பெயர் : ஒப்பம்

முகவரி : நாள்.
From

Passport Size Photo

To

The Director of Information & Public Relations,
Information and Public Relations (Exhibition) Department,
Secretariat, Chennai-9.

Sir,

Sub : Exhibition - Government Exhibition....................................-
Conduct of Publicity item under Monopoly basis - Bid offer - Regarding.

-----

I agree to abide by the conditions specified in the tender schedule for the conduct of Publicity as well as other general conditions applicable to all participants in the Government Exhibition.

I offer the rate of Rs................................(Rupees...............................................................
...........................................................................................................................) for conducting Publicity on monopoly basis in the above Government Exhibition at..................................................

Signature of the Tenderer

Name & Address :

Date :

Information & Public Relations (Exhibition) Department

GOVERNMENT EXHIBITION..................................................

**Conditions for Monopoly right to conduct publicity in the Exhibition**

*Following are the conditions stipulated for monopoly rights for publicity:*

1. Only those who have completed the age of 21 can take part in the tender/auction.
2. Publicity includes publicity through posters, banners, arches, box type loudspeakers, and video

   and T.V.media.
3. Slide shows and screening of cinema films, screening cinema through T.V.; Political party symbols or party based announcements are not permitted.
4. The publicity contractor should not object to any display put up by participating Government Departments/Undertakings inside or on the pavilions/stalls or at any point in the exhibition. He should not object to the name boards put up by the stall holders in their stalls/pavilions.
5. The publicity contractor should erect hoardings, arches and put up banners etc., only at the places specified by the Exhibition authority. Erecting hoardings, arches, banners etc., without the permission of the Exhibition authorities will be removed without any prior notice.
6. Publicity materials to be displayed and the records to be played should be got cleared by the exhibition authorities in advance.
7. Publicity of any sort which are found detrimental to the smooth running of the exhibition will not be permitted.
8. Only box type loudspeakers should be fixed to cover the entire area of the exhibitions as well as the gates. The Audio publicity should not cause any inconvenience or nuisance to the inhabitants who live nearby the exhibition ground. The speaker boxes and TVs should be installed only in the places specified by the exhibition authorities. Metal Horns should not at all be used.
9. The box loudspeakers should be fixed at the places and at the height specified by exhibition authorities. It should also not cause any inconvenience to the participants, other monopoly holders, stall holders or the visiting public. The sound should be maintained at an audible level as instructed by the exhibition authorities.
10. A list of all advertisers canvassed by the monopoly right holders should be furnished to the exhibition authorities in time. The exhibition authorities have the right to reject any advertisement matter or to stop publishing, painting them if found objectionable in any way in the interest of the public and Exhibition.
11. The publicity announcement and playing the records should start daily at the time of opening of the exhibition and should continue till the closure.

12. The sign board, banners, hoardings etc., covering the road should be got approved by the exhibition authorities and fixed not less than 20 feet height from the ground level.

13. 300 sq.ft. covered space will be provided to publicity office. This area should not be resold / handed over to any other person under any pretext by the monopoly right holder. The publicity contractor shall not use it for any other purpose such as display, sales etc. The place should be used only for running the publicity office.

14. Any announcement of public interest given by the exhibition authority should be announced properly free of charge.

15. Persons taking part in the tender should furnish an Earnest Money deposit of Rs.2,00,000/- (Rupees Two Lakhs Only) by way of a Demand Draft drawn in favour of the "Accounts Officer (Exhibition)".

16. The tenderer should have a previous experience in having conducted publicity in Government Exhibitions.

17. Those who have defaulted in payment or debarred on various reasons in the exhibitions organised by the Government of Tamil Nadu or its undertakings will not be permitted to take part in the tender.

18. The deposit of unsuccessful tenderer will be returned without interest after 30 days.

19. Exhibition authorities cannot be held responsible for the change of venue, postponement, cancellation etc. and decision of the DIPR is final in this regard.

20. The Director of Information and Public Relations reserves the right to reject the offer if the rate offered by the Tenderers is found to be not satisfactory when compared to the rates offered in the previous years. He can negotiate with the Tenderers to get a justifiable rate.

21. The Contractor has no right to object the display of Video / T.V. Clippings etc., of their own products / items made in their allotted spaces in the stalls / pavilions.

22. The decision of the Director of Information and Public Relations shall be the final in all matters of dispute regarding the publicity rights.

23. The Tender Form should be accompanied by residential proof (attested copy of Ration Card/Driving Licence, etc.) The tenderer has also to furnish Solvency Certificate obtained from the Revenue Authority for not less than the value of Earnest Money Deposit amount along with his tender Form. The successful tenderer should make full payment the Tendered amount (GST 18% extra) within six days on receipt of confirmation order without adjusting the EMD.

24. The Director of Information & Public Relations also have the right to direct the successful bidder to make full payment of the tendered amount within the specified short time before confirmation. If the Tenderer fails, the tender will be rejected.

25. The safety of the successful tenderer's materials against loss by theft, accident, fire, flood, rain, riot, arson, earthquake or any other natural calamity shall be his own responsibility and the department shall not be in any way held responsible for this. The party is advised to insure his materials at his own cost for any damage against fire, flood, theft, riot and arson, etc., The Government will not take any responsibility to pay compensation for any loss or damage suffered by the contractor or his labourers or materials used in the Government Exhibition.

26. The successful tenderer should not go back in their commitment in conducting the publicity on any grounds. No representation will be entertained in this regard and the EMD amount will be forfeited to Government if they go back on their commitment.

27. If any violation of the above conditions are noticed, suitable fine will be imposed for the violation, and the successful tenderer/bidder shall not be allowed to take part in future.

28. The successful tenderer should pay Advance amount for Electricity connection as prescribed by the Exhibition Authorities according to the provisions. The Electricity consumption charges will be Rs.20/- (Rupees Twenty only) per unit.

29. The Jurisdiction for all the Legal matters will be Chennai Courts only.

30. The tender will be accepted upto..................................p.m. on.............................and will be opened on the same day after the auction.

I agree to abide by all the above conditions stipulated for conducting publicity as well as general conditions applicable to all participants of the Exhibition.

Station : Signature

Date :

Name & Address

From

Passport Size Photo

To
The Director of Information & Public Relations,
Information and Public Relations (Exhibition) Department,
Secretariat, Chennai-9.

Sir,

Sub : Exhibition - Government Exhibition....................................-
Conduct of Amusement item under Monopoly basis - Bid offer -
Regarding.

-------

I agree to abide by the conditions specified in the tender schedule for the conduct of Amusement as well as other general conditions applicable to all participants in the Government Exhibition.

I offer the rate of Rs................................(Rupees.......................................................
........................................................................................................................ for conducting Amusement on monopoly basis in the above Government Exhibition at..................................................

Signature of the Tenderer

Name & Address :

Date :

**GOVERNMENT EXHIBITION............................................**

**Conditions for monopoly for Conducting an Amusement Complex with Mechanical Items and Side Shows in the Exhibition**

Following are the conditions stipulated for monopoly right for conducting an amusement complex in Government Exhibition........................................at.................................................

1. The tenderers for Mechanical items and side shows should themselves be the owners of side shows, or produce the lease agreement from the genuine and a reliable party for the supply of these items. Items other than the specified will not be allowed in the complex.

2. a) Any other permissible items in lieu thereof are allowed only with the prior permission of Joint Director (Field Publicity).

   b) The Mechanical items normally allowed will be one Giant Wheel, one Tora Tora, one Break dance, one Roller Coaster, Cup & Saucer, Fresh bee and Ranger any other items in lieu thereof with prior permission of the authority.

3. For any extra item other than the above, separate charges as fixed by the Exhibition authorities should be paid.

4. All the show items or machineries of amusement complex etc. should be brought to the exhibition ground one week before the commencement of the exhibition and they should be kept ready for operation two days before the inauguration of the exhibition.

5. The volume of the box type speakers in the side shows complex should be kept at a bearable volume and it should not be a nuisance to the visiting public.

6. The whole set up of side shows complex and mechanical items should be within the area earmarked and agreed upon by the exhibition authorities. Any extra area occupied will be charged at the rate decided by the Exhibition authorities.

7. The highest tenderer should inform the exhibition authority the height of the Giant wheel on receipt of confirmation order. No variation in the height is allowed.

8. The Giant wheel, etc. should be absolutely in good condition and ensure public safety in all respects. Any damage caused to the Government or public due to any malfunctions of the mechanical items etc. shall be duly compensated by the monopoly right holder.

9. An area as prescribed in the map of the Exhibition ground will be allotted for the conduct of the mechanical items and side shows in the exhibition.

10. Innovative and modern mechanical equipments should be invariably introduced replacing the older rides at reasonable intervals. The whole complex should be kept appreciable and likeable as to maintain the dignity of the exhibition and should not cause any inconvenience to the visiting public at any time.

11. All taxes due to civil and other Municipal/Corporation bodies should be paid by the monopoly holders.

12. The contractors should make their own arrangements to get necessary certificate or permission from the concerned departments for the conduct of the side shows in the exhibition.

13. Only those who have completed the age of 21 years can take part in the tender.

14. Those who have defaulted in payment in the exhibitions organised by the Government of Tamil Nadu or its undertakings will not be permitted to take part in the tender.

15. Persons taking part in tender should furnish an Earnest Money Deposit of Rs.35,00,000/- (Rupees Thirty Five Lakhs Only) by way of Demand Draft drawn in favour of the "Accounts Officer (Exhibition)"

16. The Earnest Money Deposits of unsuccessful tenderer will be returned without any interest after 30 days or after the finalisation of tender, whichever is earlier.

17. The Director of Information & Public Relations reserves the right to reject the offer if the rate offered by the Tenderer is found to be not satisfactory when compared to the rates offered in the previous years. He can negotiate with the Tenderers to get a justifiable rate.

18. The decision of the Director of Information and Public Relations shall be final in all matters of dispute and will be binding on all parties participating in the tender.

19. Exhibition authorities cannot be held responsible due to change of place, postponement, cancellation etc., and decision of the Director of Information and Public Relations is final in this regard.

20. The Tender form should be accompanied by residential proof (attested copy of Ration card / Driving Licence, etc.) The Tenderer has also to furnish Solvency Certificate obtained from the Revenue Authority or Bank Guarantee for not less than the value of EMD amount along with this tender Form. The successful Tenderer should make full payment of the Tendered amount within six days of receipt of confirmation order without adjusting the EMD.

21. The safety of the successful tenderer's materials against loss by theft, accident, fire, flood, rain, riot, arson, earthquake or any other natural calamity shall be his own responsibility and the department shall not be in any way held responsible for this. The party is advised to insure his materials at his own cost for any damage against fire, accident, flood, theft, riot, and arson etc., The Government will not take responsibility to pay any compensation for any loss/damage suffered by the contractor or his labourer or for the materials used in the Government Exhibition. Any form of inconvenience and endanger to the visiting public by any form of amusement items should be avoided and safety should be taken care of. If such untoward incident happens during the exhibition period, the successful tenderer will be held responsible in legal matters and not the exhibition authorities.

22. The tenderer should obtain Safety Certificate from Electrical Inspector of the Exhibition Venue and also produce Insurance for Mechanical Items etc.

23. Government will not take any responsibility to pay compensation or any loss or damage suffered by the public and full risk will be on the contractor.

24. If any accident occurs in the amusement area, Government will not take any responsibility in that regard and the contractor has to meet the consequences with the police authorities and public etc.

25. The successful tenderer has to obtain necessary permits or licenses from the local authorities for running the amusement items.

26. The successful tenderer has to make arrangements for installing the warning signboard wherever necessary and install fire precautionary equipment to safeguard public.

27. The tenderer must obtain stability certificate from PWD authorities concerned.

28. The serial bulb sets put up at machine and electrical rides should not be displayed by the tenderer within the easy reach of the public.

29. The successful tenderer should not go back in their commitment in conducting the amusement complex on any grounds. No representation will be entertained in this regard and the EMD amount will be forfeited to Government if they go back on their commitment.

30. The successful tenderer should pay Advance amount for Electricity connection as prescribed by the Exhibition Authorities according to the provisions. The Electricity consumption charges will be Rs.20 /- (Rupees Twenty Only) per unit.

31. The jurisdiction for all the legal matters will be Chennai courts only.

32. The tender will be accepted upto..........................p.m. on....................and will be opened on the same day after the auction.

33. If any violation of the above conditions are noticed suitable fine will be imposed for the violation, and the successful tenderer/bidder shall not be allowed to take part in future.

I agree to abide by all the above conditions stipulated for conducting Amusement Complex as well as several conditions applicable to all participants of the exhibition.

Station :

Signature of the Tenderer:

Date :

Name & Address :